JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-3 Witness
for Prosecution

| CC.No. | 21/2022 | Crime No. | 387/2021 | Station | Ammapet |
|---|---|---|---|---|---|

| Name | **Pw-3- ரவிச்சந்திரன்** | Village |
|---|---|---|
| Father's Name/Husband's Name | | Taluk |
| Age | | Calling |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 15.04.2026 | | |

**எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் அம்மாபேட்டையில் குடியிருந்து கொண்டு, டிரைவர் வேலை செய்து வருகிறேன். தேதி, மாதம் நினைவில்லை, கடந்த 4 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் மாலையில் நான் லட்சுமி நகர், போஸ்ட் ஆபீஸ் பிரிவு அருகில் சென்று கொண்டிருந்தபோது, கூட்டமாக இருந்தது. அருகில் சென்று பார்த்தபொழுது TVS 50 வாகனமும், காரும் மோதி விபத்து ஏற்பட்டு இருந்தது. நான் விபத்து நடைபெற்ற பிறகுதான் பார்த்தேன். விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. அதனால் விபத்து எவ்வாறு ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. விபத்து தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை மேற்கொள்ள நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை—**

கடந்த 12.12.2021 ஆம் தேதியன்று, மாலை சுமார் 05.00 மணியளவில் நான் அம்மாபேட்டை, லட்சுமி நகர், போஸ்ட் போஸ்ட் ஆபீஸ் பிரிவு அருகில் நின்று கொண்டிருந்ததாகவும், அப்போது அந்தியூர் – அம்மாபேட்டை ரோட்டில் இந்த விபத்தில் அடிபட்ட பச்சையப்பன் என்பவர் அவரது TVS 50 வாகனத்தில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி ரோட்டின் இடது ஓரமாக சென்று கொண்டிருந்ததாகவும், அப்போது அதே ரோட்டில் அதே திசையில் அவருக்கு பின்னால் டாடா இன்டிகா கார் வேகமாகவும், கவனக்குறைவாகவும் ஹான் அடிக்காமலும் வந்து பச்சையப்பனின் TVS 50 வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதாகவும், அந்த விபத்தை நான் நேரில் பார்த்ததாகவும், அருகில் சென்று பார்த்தபோது பச்சையப்பனுக்கு வலது கெண்டைக்கால், வலது கால் பாதம் ஆகிய இடங்களில்இரத்தக் காயமும், தலையில்

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.04.15 18:46:20 +0530

மொக்கைக்காயமும் ஏற்பட்டு, அவர் மயக்க நிலையில் இருந்ததாகவும், பின்னர் அங்கிருந்தவர்களின் உதவியுடன் ஆம்புலன்ஸ் மூலமாக அவரை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும், போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது ஏதோ ஒரு காரணத்திற்காக எதிரிக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியில்ல.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court

readover to the witness in the presence

of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.04.15 18:46:31 +0530

Sd/– (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani